அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 235

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு- 07
1984 ஜனவரி 6 ஆம் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

1 டிசம்பர் 1982 -ஆம் திகதிய இலங்கை நிருவாக
சேவை பற்றிய பிரமாணக் குறிப்பு

---

இலங்கை நிருவாக சேவைக்கு யாவருக்கும் உரிய போட்டிப்பரீட்சையின் பேறில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களை ரூ 24,000/- சம்பளப் படி நிலையில் அமர்த்துவதை பற்றிய 24(ஐ) பிரிவைத் திருத்துதல்.

1978 செப்டம்பர் 07 ஆம் திகதிய 124 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையும் 29 ஜூன் 1981 ஆம் திகதிய 192 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையும் தொடர்பாக:-

(1) இலங்கை நிருவாக சேவை பற்றிய பிரமாணக் குறிப்பின் 24 (ஐ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ரூ 24,000/- என்னும் சம்பளப் படிநிலை 01.07.1978 ஆம் திகதி தொடக்கம் (01.01.1982 ஆம் திகதிக்கு முன் ரூ11,520) ரூ 28,3[illegible]0/- (01.01.1982 ஆம் திகதிக்கு முன் 12,480) என்னும் வகையில் திருத்தப்பட்டு அதன் பிரகாரம் கொடுப்பனவுகள் செய்யப்படவேண்டும் எனவும்

(11) நிலுவைகள் செலுத்தப்படுதலாகாதெனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

2. தயை கூர்ந்து கீழ்க்காணும் வகையில் நடவடிக்கை எடுக்கவும்.

(1) 19.10.1983 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பின் 24(ஐ) பிரிவின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறவர்கள் அல்லது பூர்த்தி செய்தவர்களும் இலங்கை நிருவாக சேவைக்கு யாவருக்கும் உரிய போட்டிப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் பேரில் ஆட்சேர்க்கப்பட்ட வர்களுமானவர்களின் விண்ணப்பங்கள் தொடர்பில் 29.06.1981 ஆம் திகதிய 192 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 3-ஆம் பந்தியில் ஏற்பாடாகியுள்ளவாறு தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தேவையான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதும் அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளர் அவ்வுத்தியோகத்தர்களை புதிய சம்பளப் படி நிலையான ரு 25,200/- என்பதில் அமர்த்துவார்.

(11) 01.07.1988 ஆம் திகதி தொடக்கம் 19.10.1983 ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் ரு 24,000.(01.01.1982 திகதிக்கு முன் 11,520) என்னும் சம்பளப் படி நிலையில் அமர்த்தப்பட்டவர்களும், யாவர்க்கும் உரிய போட்டிப்பரீட்சை ஒன்றில் பெறுபேறுகளின்/ பேரில் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களின் சம்பளம் மீள அமைக்கப்படுதல் வேண்டும். இத்தகைய சந்தர்ப்பங்களில் அமைச்சின் செயலாளர்/ திணைக்களத் தலைவர்:-

(அ) சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் உரிய திகதியில் ரு 25,200/ என்னும் சம்பளப்படிநிலையில் அமர்த்தப்பட்டுள்ளார் எனக் கருதுதல் வேண்டும்.

(ஆ) இந்த அடிப்படையில் அவரது சம்பளத்தை மீள அமைத்தல் வேண்டும்.

(இ) 19.10.1983 ஆம் திகதி தொடக்கம் நிலுவை எதுவும் இன்றி அவரது புதிய சம்பளத்தை வழங்குதல் வேண்டும்.

(ஈ) அவர் புதிய சம்பளப்படி நிலையில் அமர்த்தப்பட்டதற்கான கடிதத்தின் பிரதி ஒன்றை பதிவு செய்தற் பொருட்டு அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

பீ.ஐ.குணரட்ன
மேலதிகச் செயலாளர்

ஒப்பம்/டி.பீ.ஐ.பி.எஸ்.சிறிவர்தன
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.